**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8069841

1. District மாவட்டம் : திருப்பூர் PS: காவல்நிலையம் ஊ.த.க. பிரிவு Year ஆண்டு 2020 FIR No. மு.த.அ. எண்: 3/AC/2020 Date: நாள் 23.10.2020

2. (i) Act சட்டம்: The Prevention of Corruption — Sections பிரிவுகள்:
(ii) Act சட்டம்: Act 1988 as amended in — Sections பிரிவுகள்: 7, 7A r/w 12
(iii) Act சட்டம்: 2018 — Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்
Date from : நாள் முதல்
Date to : நாள் வரை 22.10.2020-ம் தேதி 16.45 மணி முதல் 23.30 மணி வரை
Time Period : நேர அளவு
Time from : நேரம் முதல்
Time to : நேரம் வரை
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 23.10.2020 Time நேரம் : 08-00 hrs
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 23.10.2020 Time நேரம் : 08.00 hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக SUO-MOTO

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்
Beat Number : முறைக் காவல் எண்
(b) Address : முகவரி காங்கேயம் சார்பதிவாளர் அலுவலகம், காங்கேயம், திருப்பூர் மாவட்டம். சுமார் 27 கி.மீ வடமேற்கு
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர்
District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் திரு. M. நடராஜன்
(b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் திரு. முத்துசாமி
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 1972
(d) Nationality : நாட்டினம் இந்தியன்
(e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள்
Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் காவல் துறை கண்காணிப்பாளர்
(g) Address : முகவரி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு திருப்பூர்

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary).
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
1) திரு. சிவனன்டி, 50 த/பெ பொன்னுசாமி, சார்பதிவாளர், காங்கேயம் சார்பதிவாளர் அலுவலகம், காங்கேயம்
2) திரு. செந்தமிழ்செல்வம், 46 த/பெ இராசு, இளநிலை உதவியாளர், காங்கேயம் சார்பதிவாளர் அலுவலகம்
3) க. மகேந்திரன், 45 த/பெ கண்ணன், 1/32-2, ஆதி திராவிடர் தெரு, காங்கேயம், திருப்பூர் மாவட்டம் (தரகர்)

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
தாமதமில்லை.

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)

Scanned with CamScanner

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet If necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

திடீர் சோதனையின்போது, பாலக்கோடு சார்பதிவாளர் அலுவலகத்தில் கைப்பற்றப்பட்ட கணக்கில் வராத மொத்த பணம் ரூ. 42,250/-

10. Total value of properties stolen / Involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. If any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

இத்துடன் தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed M. NATARAJAN Rank DSP to take up the Investigation / Refused Investigation / transferred to PS V&AC, DHARMAPURI on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

SUO-MOTO

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

[signature] 23/10/2020
Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
23.10.2020 / 10.00 Hrs

Name: பெயர் M. NATARAJAN
Rank: நிலை Deputy Supdt. of Police, V&AC, DHARMAPURI No. எண்

**Attachment to Column 12 of FIR in Dharmapuri V& AC Cr.No.3/AC/2020, u/s 7, 7 r/w 12 of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018,**

தருமபுரி மாவட்டம், பாலக்கோடு சார்பதிவாளர் அலுவலகத்தில் பத்திரபதிவு செய்வதற்காகவும், வில்லங்க சான்றிதழ் வழங்குவதற்காகவும், பத்திர நகல் எடுத்து தருவதற்காகவும், ஏற்கனவே பதிவு செய்யப்பட்ட ஆவணங்களை விடுவிக்கவும் மற்றும் இதர பணிகளை செய்யவும் பொதுமக்களிடம் கையூட்டு பணத்தை சார்பதிவாளர் அலுவலக அலுவலர்கள் இடைதரகர்கள் மூலம் அதாவது குறிப்பாக பாலக்கோடு சார்பதிவாளர் அலுவலகத்திற்கு எதிரே ஜெராக்ஸ் கடை நடத்திவரும் திரு.மாதேஷ், பாலக்கோடு என்பவர் மூலம் பாலக்கோடு சார்பதிவாளர் அவர்கள் வசூல் செய்து பெறுவதாகவும் கிடைத்த நம்பத்தகுந்த தகவலின் பேரில் 22.10.2020–ந்தேதி மாலை சுமார் 4.45 மணி முதல் 23.30 மணிவரை நான், அரசு சாட்சிகள் 1) திரு. கு.ராகவேந்திரன், த/பெ. குப்புராஜ், கண்காணிப்பாளர், வட்டாரக்கல்வி அலுவலகம், தருமபுரி 2) திரு.H.S.பழனி த/பெ.சுப்பிரமணியம், கூட்டுறவு சார்பதிவாளர், பொது விநியோக திட்டம், நல்லம்பள்ளி, துணைப்பதிவாளர் பொது விநியேக திட்டம் அலுவலகம், தருமபுரி மாவட்டம் மற்றும் காவலர்கள் குழுவுடன் மேற்படி அலுவலகத்தை திடீர் சோதனை செய்தேன்.

2) இந்த சோதனைக்கு சோதனை குழுவினருடன் மேற்படி அலுவலகத்திற்கு உள்ளே நுழைந்தபோது அலுவலகத்தின் நுழைவாயில் அருகே தனிநபர் திரு.மாதேஷ், பாலக்கோடு என்பவர் நின்று கொண்டிருந்தார். அவரிடம் சோதனைக்கு வந்த விபரம் தெரிவித்து சார்பதிவாளர் அலுவலகத்தின் வராண்டாவில் போடப்பட்டிருந்த பெஞ்சில் அமரவைத்தேன். அதன்பிறகு அந்த அலுவலகத்தை சோதனையிட வந்த விபரத்தை சார்பதிவாளரிடம் தெரிவித்து என்னையும், என்னுடன் வந்த அரசு சாட்சிகள் மற்றும் காவலர் குழுக்களை நான் அறிமுகம் செய்துகொண்டேன்.

3) அந்த அலுவலகத்தின் வருகை பதிவேட்டை சரிபார்த்தபோது 1) சார்பதிவாளர் திரு.பி.சரவணன், 2) உதவியாளர் திரு.ரா.விக்ரமன், 3) இளநிலை உதவியாளர் திரு.ஆர்.செந்தமிழ்செல்வம், 4) அலுவலக உதவியாளர் திருமதி.கோ.முருகம்மாள்

23/10/2020

ஆகியோர்கள் அந்த வருகைபதிவில் அலுவலுக்கு ஆஜரானதற்கு சுருக்கொப்பம் செய்திருந்தனர். மற்ற அலுவலர்களுக்கு வெளிப்படையான வருகைப்பதிவேடு இல்லை. இணையவழி மூலம் பராமரிக்கப்படுவதாக தெரிவித்தார்கள். இவர்கள் அனைவர் வசமும் காணப்பட்ட தொகைகளை பற்றி விசாரித்து, சார்பதிவாளர் திரு.சரவணன் ஆஜர் செய்த அலுவலக தனிநபர் பண இருப்பு பதிவேட்டில் இருந்த தொகையுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டது.

4) அதில் திரு.ஆர்.செந்தமிழ்செல்வம், இளநிலை உதவியாளர் வசம் மொத்தம் ரூ.2710/– காணப்பட்டது. ஆனால் அவர் தனிநபர் இருப்பு பதிவேட்டில் ரூ.860/– அன்றைய தினம் கொண்டுவந்ததாக பதிவுகள் செய்து கையொப்பமிட்டிருந்தார். கூடுதலாக இருந்த ரூ.1850/– தொகை மட்டும் பத்திரம் பதிவு செய்ய வரும் நபர்களிடம் இவர் தன் வேலையான பத்திரம் ஸ்கேன் செய்யும் பணியை செய்யவும், பத்திர வரிசை எண் கொடுக்கவும் கையூட்டாக பெற்றிருக்கலாம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் இந்த நடவடிக்கையின் போது விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. இது குறித்து அவரிடம் வாக்குமூலம் பெறப்பட்டது. இவரது இந்த நடவடிக்கை Sec 7 of PC Act, 1988 as amended in 2018 –ன்படி வழக்கு பதிவு செய்ய முகாந்திரம் உள்ள செயலாகும். அலுவலகத்திலிருந்த மற்ற அலுவலர்களிடம் காணப்பட்ட தொகைகள் கணிசமானதாகவும், சொந்த செலவிற்கு வைத்துள்ளதாகவும் ஏற்றுக்கொள்ளத்தக்க வகையில் விளக்கங்கள் கூறியதாலும், அதில் ஒரு சில அலுவலர்கள் தனிநபர் பணஇருப்பு பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டிருந்த தொகையுடன் ஒத்துபோகும் வகையில் அவர்களிடம் காணப்பட்ட தொகைகளை அவர்களிடமே திருப்பி ஒப்படைக்கப்பட்டது.

5) பின்னர், சார்பதிவாளரிடம் அன்றைய அலுவலக பண இருப்பை பற்றி கேட்டதில், கையிருப்பு ஏதுமில்லையென்றும், அனைத்து பதிவுகளுக்கும் ஆன்லைன் மூலம் கட்டணம் வசூலிக்கப்படுகிறது என்றும் சார்பதிவாளர் தெரிவித்தார். மேலும் அன்று 28 ஆவணங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும், வில்லங்க சான்றிதழ்–14, சான்றிட்ட நகல்–6 ஆகியவைகளை கேட்டு இணைய வழி மூலம் பொதுமக்கள் விண்ணப்பித்துள்ளனர் என்றும், அதற்கான கட்டணமும் ஆன்லைன் மூலம் செலுத்தப்பட்டுள்ளது என்றும்

23/10/2020

தெரிவித்தார். அவரிடம் இன்றைய கட்டண விபரங்கள் அடங்கிய கணினி மூலம் பிரெண்ட் எடுத்த பக்கம் 1 முதல் 20 பக்கங்கள் அடங்கிய பதிவேட்டு விபரம் சார்பதிவாளரிடம் சான்றொப்பத்துடன் விசாரணைக்காக பெறப்பட்டது.

6) இந்த நடவடிக்கையின்போது, அலுவலக வராண்டாவில் அமரவைக்கப்பட்டிருந்த திரு.மாதேஸ் என்பவரை விசாரித்தபோது, அவர், தான் பாலக்கோடு, ஆதிதிராவிடர் தெருவில் குடியிருந்து வருவதாகவும், பாலக்கோடு தீர்த்தகிரி நகரில் பழைய போஸ்ட் ஆபிஸ் அருகில் அதாவது பாலக்கோடு சார்பதிவாளர் அலுவலகத்திற்கு எதிரில் ஜெராக்ஸ் கடை வைத்துள்ளதாகவும், நாள் ஒன்றுக்கு 300 காப்பிகள் வரை ஜெராக்ஸ் எடுப்பதன் மூலம் தினமும் சுமார் 600 ரூபாய்கள் வரை வருமானம் கிடைக்கும் என்றும், தான் பாலக்கோடு சார்பதிவாளர் அலுவலகத்திற்கு நாள் ஒன்றுக்கு இரண்டு மூன்று முறை வருவேன் என்றும், சார்பதிவாளர் திரு.சரவணன் அவர்களை எனக்கு நன்கு தெரியும் என்றும், அவருடைய செல்போன் எண். 9789243156 என்றும், அவர் சொல்லும் வேளைகளை நான் அவருக்கு செய்து கொடுப்பேன் என்றும், பத்திரம் பதிவு செய்யும் பார்ட்டிகளிடம் சார்பதிவாளர் அவர்களுக்காக அவர் சொல்லும் நபர்களிடம் அலுவலகத்திற்கு வெளியில் வைத்து பணம் வசூல் செய்து அதை பின்பு அவர் சொல்லும்போது அவரிடம் கொடுப்பேன் என்றும், அவரிடம் என் செல்போன் எண்.7708390544 –லிருந்து பேசியும் உள்ளேன் என்றும், இன்று இரண்டு மூன்று முறை சார்பதிவாளர் அலுவலகம் வந்தேன் என்றும், இன்று சார்பதிவாளருக்காக வசூலான லஞ்ச தொகையுடன் நான் மாலை சுமார் 4.15 மணிக்கு சார்பதிவாளர் அலுவலகத்திற்கு வந்துவிட்டு அலுவலகத்திற்கு வெளியே நின்று கொண்டிருந்தேன் என்றும் தெரிவித்து அவரிடம் சொந்த பணம் சட்டையின் மேல் பாக்கெட்டில் வைத்திருப்பதாக கூறி ரூ.7710/–ஐ ஆஜர் செய்தார். அதுபோக 5 கத்தைகளாக இருந்த ரூபாய் நோட்டுகளை அவருடைய பேண்ட் பாக்கெட்டிலிருந்து எடுத்து ஆஜர் செய்தார். அதில் ரூ.39500/–. ரூ.3000/–, ரூ.24000/–, ரூ.12200/–, ரூ.1200/– ஆக மொத்தம் ரூ.79900/– இருந்தது.

7) மேற்படி தொகைகளை பற்றி விசாரித்தபோது, அதில் ரூ.39500/– மட்டும் தனக்கு தெரிந்த பத்திர விற்பனையாளர் திரு.மாதேஷ் என்பவருக்கு கொடுக்கவேண்டிய

23/6/2020

தொகையாகும் என்றும், மீதிதொகை ரூ.40,400/–, தான் சார்பதிவாளர் அவர்களுக்காக வசூல் செய்த தொகையாகும் என்றும் கூறினார். எனவே, அந்த லஞ்ச தொகை ரூ.40,400/–ஐ விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மீதி தொகை ரூ.39,500/– மற்றும் அவருடைய சொந்த பணம் எனக்கூறிய ரூ.7710/– ஆகியவற்றை அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. இது குறித்து அவரிடம் வாக்குமூலம் தனியாக பெறப்பட்டது.

8) இந்த தொகையை பற்றி சார்பதிவாளர் திரு.சரவணன் அவர்களிடம் விசாரித்தபோது, அவர் அவருடைய அலுவலகத்திற்கு எதிரே ஜெராக்ஸ் கடை வைத்திருக்கும் திரு.மாதேஸ் என்பவர் அலுவலகத்திற்கு அடிக்கடி வருவார் என்றும், எல்லா அறைகளுக்கும் வருவார் என்னிடம் பேசுவார் என்றும், தன்னிடம் ஏதாவது சந்தேகங்கள் கேட்பார், நாள் ஒன்றுக்கு குறைந்தது ஒருமுறை அல்லது இருமுறையாவது வருவார் என்றும் தெரிவித்தார். சார்பதிவாளர் திரு.சரவணன் அவர்கள், தனிநபர் திரு.மாதேஸ் என்பவரை பாலக்கோடு சார்பதிவாளர் அலுவலகத்திற்கு பத்திரம் பதிவு செய்யவரும் நபர்கள் மற்றும் இதர பணிகளை செய்ய வரும் நபர்களிடம் லஞ்சமாக பணம் வசூல் செய்ய நியமித்த மேற்படி செயல் u/s 7 of PC Act, 1988 as amended in 2018 –ன்படி வழக்கு பதிவு செய்ய முகாந்திரம் உள்ள செயலாகும். தனிநபர் திரு.மாதேஸ் என்பவர் சார்பதிவாளர் திரு.சரவணன் அவர்கள் அறிவுரைப்படி பாலக்கோடு சார்பதிவாளர் அலுவலகத்திற்கு பத்திரம் பதிவு செய்ய வந்த நபர்கள் மற்றும் இதர பணிகளை செய்ய வந்த நபர்களிடம் லஞ்சமாக பணம் வசூல் செய்து வைத்திருந்த மேற்படி செயல் u/s 7 r/w 12 of PC Act, 1988 as amended in 2018 –ன்படி வழக்கு பதிவு செய்ய முகாந்திரம் உள்ள செயலாகும்.

9) இந்த திடீர் சோதனை நடவடிக்கையின்போது, சார்பதிவாளரிடம் அலுவலக வருகை பதிவேட்டின் சான்றொப்பம் இட்ட நகல் பக்கம்–1 முதல் 4 வரை விசாரணைக்காக பெறப்பட்டது. தனிநபர் பணஇருப்பு பதிவேடு பக்கம்–1 முதல் 72 வரை அசலாக விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. சார்பதிவாளர் அவர்கள் அலுவலகத்தில் படைவீரர் கொடிநாள் வசூல் இலக்கோ அல்லது சிறுசேமிப்பு நிதி இலக்கோ ஒதுக்கப்படவில்லை என தெரிவித்தார். இது குறித்து அவரிடம் வாக்குமூலம் தனியாக பெறப்பட்டது. இந்த திடீர்

23/10/2020

சோதனை நடவடிக்கைகள் முழுவதும், அரசு விதிமுறைகளின்படி சமூக இடைவெளியை கடைபிடித்தும், அவ்வப்போது கிருமி நாசினி கொண்டு அனைவர் கைகளை சுத்தம் செய்தும், முகக்கவசம் அணிந்தும் மேற்கொள்ளப்பட்டது. திடீர் சோதனை தொடர்பான இதர விபரங்கள் 22.10.2020 தேதியிட்ட எனது நடவடிக்கைகளில் விரிவாக கூறப்பட்டுள்ளது.

10) எனவே, மேற்படி நிகழ்வுகள் தொடர்பாக புலன்விசாரணை செய்யும் பொருட்டு, Dharmapuri V& AC Cr.No.3/AC/2020, u/s 7, 7 r/w 12 of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018- ன்படி 1) திரு.பொ.சரவணன், சார்பதிவாளர், பாலக்கோடு சார்பதிவாளர் அலுவலகம், தருமபுரி மாவட்டம், 2) திரு.ஆர்.செந்தமிழ்செல்வம், இளநிலை உதவியாளர், பாலக்கோடு சார்பதிவாளர் அலுவலகம், தருமபுரி மாவட்டம், 3) திரு.கே.மாதேஸ் (45/20) த/பெ.கண்ணன், 1/32-2, ஆதிதிராவிடர் தெரு, பாலக்கோடு, தருமபுரி மாவட்டம் (தனிநபர்) ஆகியோர்கள் மீது இன்று 23.10.2020ந்தேதி காலை 08.00 மணிக்கு ஊழல் தடுப்பு இயக்குநரக வாய்மொழி அனுமதி பெற்று வழக்கு பதிவு செய்கிறேன்.

23/10/2020
(எம்.நடராஜன்)
காவல் துணை கண்காணிப்பாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு
தருமபுரி